செய்தி வெளியீடு **நாள் : 21.07.2024**

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.11.14 கோடி மதிப்பீட்டில் சென்னை வெளிவட்ட சாலையில் அமைக்கப்பட்டு வரும் 4 உடற்பயிற்சி பூங்காக்களையும் மற்றும் முடிச்சூரில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.42.70 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் ஆம்னி பேருந்துகள் நிறுத்துவதற்கான இடத்தினையும் (Idle Bus Parking for Omni Buses)

மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று களஆய்வு செய்தார்.

****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (21.7.2024) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் **ரூ.11.14 கோடி** மதிப்பீட்டில் சென்னை வெளிவட்ட சாலையில் மீஞ்சூர், வெள்ளனூர், திருநாகேஸ்வரம் மற்றும் வரதராஜபுரம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு வரும் **4 உடற்பயிற்சி பூங்காக்களையும்** மற்றும் முடிச்சூரில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் **ரூ.42.70 கோடி** மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் **ஆம்னி பேருந்துகள்** நிறுத்துவதற்கான இடத்தினையும் (Idle Bus Parking for Omni Buses) **மாண்புமிகு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு **களஆய்வு செய்து, நடைபெற்று வரும் அனைத்து பணிகளையும் விரைந்து முடிக்க அலுவலர்களை அறிவுறுத்தினார்**.

மாண்புமிகு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்கள். சரியான திட்டமிடமில்லாமல் கடந்த ஆட்சி காலத்தில் உருவாக்கப்பட்ட அந்த கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்திற்கு தேவைப்படுகின்ற பல்வேறு கட்டமைப்புகளை தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். அந்த வகையில் ஆம்னி பஸ்கள் நிறுத்துவதற்கு என்று தனியாக இடம் வேண்டுமென்ற ஆம்னி பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினர் வைத்த கோரிக்கையை ஏற்று சுமார் 5 ஏக்கர் நிலப்பரப்பில் 42.70 கோடி ரூபாய் செலவில் ஒரு முறை 117 பஸ்கள் நிறுத்துகின்ற அளவிற்கு இந்த பஸ் நிலையம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. இதில் கழிப்பறை, குளியல் அறை என்று 14 உருவாக்கப்பட்டு இருக்கின்றது. அதேபோல் ஓட்டுநர்கள் மற்றும் அந்தப் பேருந்தை சுத்தம் செய்கின்ற கிளீனர்கள் போன்றோர் தங்குவதற்காக இரண்டு கட்டடங்களாக உணவு கூடத்துடன் கூடிய 100 பேர் தங்குகின்ற அளவிற்கு இரண்டு கட்டடங்கள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன.

மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கா வண்ணம் நிலத்திலிருந்து உயர்த்தி கட்டப்பட்டு இருக்கின்றது. இந்த பேருந்து நிலையம் பயன்பாட்டிற்கு வரும் பொழுது நிச்சயமாக ஆம்னி பேருந்துகள் நிறுத்துவதற்கு காலையில் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்திற்கு சென்று அல்லது இரவிலே கிளாம்பாக்கத்திற்கு சென்று பயணிகளை ஏற்றி செல்வதற்கு இந்த முடிச்சூர் ஆம்னி பேருந்து நிலையம் வெகுவாக பயன்பாட்டிற்கு இருக்கும் என்ற நம்பிக்கையோடு இந்த பேருந்து நிலையம் உருவாக்கப்பட்டு இருக்கின்றது. அடுத்த மாத இறுதிக்குள் இந்த பேருந்து நிலையம் பயன்பாட்டிற்கு

கொண்டு வருவதற்கு உண்டான நடவடிக்கைகளை எடுப்பதற்காக இன்று காலையில் இருந்து துறையினுடைய செயலாளர் அன்பிற்கினிய திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்களும் துறையினுடைய உறுப்பினர் செயலர் அன்பிற்கினிய திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்களும் இந்த ஆய்வினை மேற்கொண்டு இருக்கின்றோம்.

இந்த ஆய்வின் தொடர்ச்சியாக வெளிவட்டச் சாலை அமைந்திருக்கின்ற பகுதிகளில் சுமார் 63 கிலோ மீட்டர் அளவிற்கு 50 மீட்டர் அகலத்திற்கு சுமார் 65 ஏக்கர் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. இந்த வெளிவட்ட சாலையில் 4 இடங்களில் உடற்பயிற்சி பூங்காக்கள். இந்த உடற்பயிற்சி பூங்காக்களில் திறந்தவெளி திரையரங்குகள், உடற்பயிற்சிக்கு தேவையான உபகரணங்கள், குழந்தைகள் விளையாடும் பகுதி, யோகா புல்வெளி, நடை பயிற்சி ஸ்டேடியம் போன்ற அனைத்து வசதிகளுடன் கூடிய ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் சென்னை வெளிவட்ட சாலையில் மீஞ்சூர், வெள்ளனூர், திருநாகேஸ்வரம் மற்றும் வரதராஜபுரம் ஆகிய இடங்களில் உருவாக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. அதையும் இன்று காலை ஆய்வினை மேற்கொண்டோம்.

அதேபோல் ஒரு பத்து பிரிவுகளாக இருக்கின்ற சுமார் 53 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தை அரசு பயன்பாடு அல்லது மாற்று பயன்பாட்டிற்கு டெண்டர் விடுவதற்கு உண்டான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த இடங்களையும் இன்றைக்கு காலை பார்வையிட்டிருக்கும். சென்னை வெளிவட்ட சாலையில் அமைந்திருக்கின்ற அந்த இடங்களில் எச்டி பேரெழுத்த மின் கம்பி வடம், அதேபோல் நீர்நிலைப் பகுதிக்குள் வருகின்ற இடங்கள் இவைகளை தவிர்த்து பயன்பாட்டிற்கு சுமார் 400க்கும் மேற்பட்ட ஏக்கர் பொது பயன்பாட்டிற்கு உகந்த இடங்களாக இருக்கின்றது, அதையும் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான திட்டமிடல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதையும் வெகுவிரைவில் **மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களுடைய** கவனத்திற்கு கொண்டு சென்று எந்தெந்த பகுதிகளை எந்தெந்த திட்டங்களுக்கு பயன்படுத்தலாம் என்று அவர்களுடைய அறிவுரையும் ஆலோசனையும் பெற்று அந்த இடங்களையும் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான திட்டமிட்டு இருந்தோம். **இன்றைய ஆய்வு மக்கள் பயன்பாட்டிற்கு மக்கள் பணிகளுக்கு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் முழுமையாக தன்னை அர்ப்பணித்துக் கொண்டு செயல்படுகிறது என்பதற்கு இந்த ஆய்வு ஒரு எடுத்துக்காட்டு**. இவ்வாறு மாண்புமிகு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.சுதர்சனம் அவர்கள், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.ஜே.கோவிந்தராஜன் அவர்கள், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.துரை சந்திரசேகர் அவர்கள், மீஞ்சூர் பேரூராட்சித் தலைவர் திருமதி.ருக்மணி மோகன்ராஜ், துணைத் தலைவர் திரு.பா.அலெக்சாண்டர், ஊராட்சி மன்ற தலைவர் திரு.கா.சு.ஜெகதீசன், சிஎம்டிஏ தலைமைத் திட்ட அமைப்பாளர் திரு.ஆர்.ருத்ரமூர்த்தி, கண்காணிப்புப் பொறியாளர் (பொ) திரு.மா.பாலமுருகன் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் திரு.கா.சு.தமிழ் உதயன் ஆகியோர் உடனிருந்தனர்.

Verified by RealStories